

அளவெட்டி கும்பளாவளையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி உரோகினி குருசாமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்



16-09-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கும்பளாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி உரோகினி குருசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

16-09-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குலம் காத்த ஒளிவிளக்காய்
குடும்பத்தின் அன்பான திருமகளாய்
பாசமாய் எமை வளர்த்தெடுத்த அன்னையாய்
பண்போடு நாம் வாழ வழிதந்த ஆசானாய்
சுற்றம் கூடிவர புன்னகை மாறாப் புதுப்பூவாய்
நாம் வாழ உமை உருக்கிய அன்பின் உறைவிடமாய்
எம் பாதி வழி கூட வந்து மீதி வழி தனியாக்கி
காற்று வழி கலந்திட்ட பேரொளியே
நெஞ்சத் தடாகத்தில் நிரந்தரமாய் உமை வளர்த்து
நினைவுப் பூவெடுத்து விழிநீர் தான்கழுவி
ஆத்மா சாந்திக்காய் அர்ப்பணித்தோம்
உம் அடியில்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணுலகில்
23.11.1942

விண்ணுலகில்
17.08.2016

அமரர்

# திருமதி உரோகினி குருசாமி

அவர்கள்

## திதி வெண்பா

துர்முகி வருட ஆவணித் திங்கள் முதன்நாளின் பிற்பொழுதில்
பொங்கு பூரணை நிறையும் பூர்வபக்க சதுர்த்தசியில்
கும்பளாவளைப் பிள்ளையார் வரம் பெற்ற உத்தமியாம்
உரோகினி உலகத்து உறைநீர்த்து பேரின்ப வீடுபெற
உத்தமனார் சிவனடி சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தெய்வத்தமிழ் திருமுறைப்பாக்கள்



**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

திருச்சிற்றம்பலம்

**விநாயகர் வணக்கம்**

அல்லல்போம், வல்வினைபோம், அன்னைவயிற்றிற்பிறந்த
தொல்லைபோம், போகாத் துயரம் போம் நல்ல
குணமதிகமாம் அருனைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழகக் கால்.

**தேவாரம்**

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயன் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வார்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

**திருவாசகம்**

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

**திருவிசைப்பா**

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந் தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடிஈசற் காட்
செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

திருச்சிற்றம்பலம்

**மாறுதல்கள் நிச்சயம் தவிர்க்க முடியாதவை. மாற்றங்களை எதிர்கொள்ள மன உறுதி வேண்டும். மாற்றம் என்பதைத் தவிர மாறாதது உலகில் இல்லை.**

**– கார்ல் மார்க்ஸ்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு கடல் இந்து மகா சமுத்திரத்திரத்தின் முத்தாம் இலங்கையின் வடமாகாணத்தின் தலைநகராம் யாழ்ப்பாணத்தின் சிறந்த கிராமங்களில் ஒன்றாகிய அளவெட்டி சகல வளங்களும், கலைகளும், கல்வி மான்களும் நிறைந்த ஒரு அழகான கிராமம். இங்கு திரும்பிய இடமெல்லாம் இறைவனின் புகழ்பாடும் ஆலயங்கள் தென்படுகின்றன. அளவெட்டி கிராமத்தின் மத்தியில் இருந்து மக்களிற்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கும்பளாவளை பிள்ளையார் ஆலயமும் அதில் ஒன்றாகும். இந்த ஆலயத்துடன் தன்னை ஒன்றிணைத்து அல்லும் பகலும் விநாயகனுக்கு தொண்டாற்றி அவன் பாதத்துடன் இரண்டறக் கலந்த

# அமரர் குருசாமி உரோகினி
### அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

அளவெட்டியில் பிரபல தொழிலதிபராக விளங்கிய யானை மார்க் சுருட்டு கம்பனியின் உரிமையாளர் அமரர் முருகர் பொன்னையா சிவக்கொழுந்து தம்பதியின் இரண்டாவது புத்திரியாக 1942ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி இவ்வுலுகில் அவதரித்தார். சந்தானலட்சுமியை அன்பு அக்காவாகவும் கனகசபை (ஓய்வு பெற்ற பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், கொழும்பு) , வசந்தாதேவி (கொக்குவில்) , லிங்கராசா (ஜேர்மனி), தங்கேஸ்வரி (நல்லூர்) , கிருஷ்ணதாஸா (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஜேர்மனி), ஜெயந்தி (அளவெட்டி), ஜெயக்குமார் (ஜேர்மனி) , சுதா (சுவிஸ்) ஆகியோர்களை அன்புச் சகோதரர்களாகவும் பெற்று மகிழ்ந்தார்.

இவர் சிறுவயதில் பெற்றோர்களாலும் சகோதரர்களாலும் உற்றாராலும் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டார். தனது கல்வியை அக்காலத்தில் மிக சிறந்த கல்விக் கூடமாக விளங்கிய யா/சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தில் கற்று S.S.C வரை சிறப்பாக கற்று தேர்ச்சி பெற்றார்.

வசீகர வதனமும் இளமையும் அமையப் பெற்ற இவர் திருமண வயதை அடைந்ததும் பருத்தித்துறையைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினசாமி தையல்நாயகி தம்பதிகளின் மூத்த புதல்வனும் அரச உத்தியோகத்தருமான குருசாமி என்னும் கம்பீர புருசனை 21.03.1962ம் ஆண்டு திருமணம் செய்து அமரர் துரைச்சாமி, அமரர் சறோஜினி, யோகசாமி (கனடா) திருநாவுக்கரசு (பருத்தித்துறை) என்பவர்களால் அண்ணி என அன்பாக அழைக்கப்பட்டார் தன் கரம்பிடித்தவரின் சகோதரர்களையும் தன் சகோதரர்கள் போல் இனிதே போற்றி வந்தார்.

இல்லறத்தை நல்லறமாய் கொண்டு பெருமையுடன் வாழ்ந்த தம்பதிகளின் ஈருடல் ஓருயிராய் ஒன்றி பஞ்சபாண்டவர் போல் ஐந்து ஆண் பிள்ளைகளையும் ஐவரும் சீராட்ட ஒரு பெண் பிள்ளையையும் பெற்று அவர்களுக்கு விமலன், றஜனி, ராஜ்மோகன், முகுந்தன், இராகவன், பிரபாகரன் எனப் பெயரிட்டு பிள்ளைகளிற்கு குறையேதும் இன்றி வளர்த்து வந்தார்.

பிள்ளைகளின் நல் வாழ்விற்காக தனது வாழ்வில் பிள்ளையாரிடம் கையேந்தி நின்று பிரார்த்தித்தார். இதன் பலனாக பிள்ளைகள் அனைவரும் சீரும் சிறப்புமாக வாழ்வதை கண்டு மனம் மகிழ்ந்திருந்தார். தனது பிள்ளைகளை மாத்திரம் இன்றி உறவினர், சகோதரர், நண்பர்கள் அனைவரையும் அரவணைத்து

**"இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்பதற்கு இணங்க விருந்தோம்பலை அன்புடன் செய்து வந்தார் என்பதை அவர் வீட்டில் மகிழ்ந்திருந்த யாவரும் அறிவார்கள்.

நாட்டில் அரசியல்போக்கு போர்ச் சூழல் போன்ற காரணிகளால் ஊரைவிட்டு இடம் பெயர்ந்து வன்னிப் பெருநிலப் பரப்பில் பாண்டியன் குளத்தில் தஞ்சமடைந்தார். இல் வாழ்வில் முப்பத்தைந்து வருடங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்து குடும்ப பாரத்தினை பொறுப்புடனே சுமந்து பக்க பலமாக இருந்த ஆருயிர் கணவனை 1997ம் ஆண்டு கார்த்திகை திங்கள் 3ம் நாள் காலன் அவரிடம் இருந்து பிரித்துக் கொண்டான். சொற்ப நாட்கள் சுகவீன முற்றிருந்த தனது அன்புக் கணவனை இறுதிவரை கண்ணும் கருத்துமாக பராமரித்து அந்தக் கடமையையும் செவ்வெனவே நிறைவு செய்தார்.

தனது பிள்ளைகளினது இல்லற வாழ்விற்குரிய பொருத்தமான வாழ்க்கை துணைகள் அமைந்ததையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமகிழ்ந்திருந்தார். அந்த வகையில் மூத்த மகன் விமலன் நெடுந்தீவை சொந்த இடமாகக் கொண்ட திரு.திருமதி குமாரசுவாமி தம்பதிகளின் இரண்டாவது மகள் ஜெயபாரதியை கரம்பிடித்து சிறப்பாக வாழ்வதையும் அதன் பயனாக பெற்றெடுத்த கௌதமி, அருண்பிரகாஸையும் கொஞ்சி மகிழ்ந்தார்.

தனது ஒரே மகளான ரஜனியை வல்வெட்டித்துறையை சொந்த இடமாக கொண்ட திரு.திருமதி பொன்னுத்துரை தம்பதிகளின் கடைசி மகன் நற்பண்பாளனான மங்கேளஸ்வரனுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். அவர்களது நல்வாழ்வைக் கண்டு மனநிறைவடைந்ததுடன் அவர்கள் மகனான சாருஜனுடன் தனது இறுதி நாள்வரை கொஞ்சி மகிழ்ந்தார்.

அடுத்த மகன் ராஜ்மோகனை வவுனியாவை சொந்த இடமாகக் கொண்ட திரு.திருமதி சுந்தரலிங்கம் தம்பதிகளின் மகள் தயாளசுந்தரியை கரம்பிடித்து ஆனந்தமான வாழ்வு வாழ்வதையும் அதன் பயனாக ஆர்திகா, அனுசன், அனிதா எனும் குழந்தைகளையும் பெற்று சிறப்பான வாழ்வு வாழ்வதை மகனின் அழைப்பின் பேரில் ஜேர்மன் சென்று மகன், மருமகள், பேரக் குழந்தைகளுடன் சிறிது காலம் ஆனந்தமாக வாழ்ந்து திரும்பினார்.

அடுத்த மகன் முகுந்தனை பருத்தித்துறையை சேர்ந்த திரு.திருமதி வடிவேலு தம்பதிகளின் இளைய மகளான யசோதராதேவியை மணமுடித்துக் கொடுத்து அவர்கள் சிறப்பான வாழ்வின் பயனாக பெற்றெடுத்த சந்தோஷ், வைஷ்ணவி, பிரணவி எனும் பேரக் குழந்தைகளுடன் தானும் சிரித்து மகிழ்ந்தார்.

அடுத்த மகன் இராகவன் அளவெட்டியைச் சேர்ந்த திரு.திருமதி இராஜரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி லதாங்கியை கரம்பிடித்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்ததன் பயனாக பெற்றெடுத்த பிரவீனா, பிரபஞ்சன், பிரியங்கன் எனும் பேரக் குழந்தைகளுடன் பிரியமாக உறவாடி மகிழ்ந்தார்.

இளைய மகனான பிரபாகரன் எனும் பிரபாவை பருத்தித்துறையை சேர்ந்த திரு.திருமதி செல்வநாயகம் தம்பதிகளின் இளைய மகளான இராஜராஜேஸ்வரியை மணமுடித்துக் கொடுத்து இன்பமான வாழ்வு வாழ்வதன் பயனாக அபிப்பிரியன், அக்சாயினி எனும் பேரப்பிள்ளைகளை அன்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்து மகிழ்ந்தார்.

தனது பிள்ளைகள் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் எந்தப் பிள்ளைகளுக்கு என்ன தேவையோ அத்தேவைகளை சிறப்பாக செய்திடுவார். எங்கு எப் பிள்ளைகளுக்கு தனது உதவி தேவைப்படுகிறதோ தனது நலனைப்பாராது அப்பிள்ளை வீட்டில் சென்று தங்கிடுவார். தினமும் இரவில் தொலைபேசி மூலம் பிள்ளைகள் வந்துவிட்டார்களா சமைத்து விட்டீர்களா எனக் கேட்டு எல்லோரும் நலமாக உள்ளதை அறிந்து தானும் நிம்மதி அடைவார்.

அண்மைக்காலமாக கும்பளாவளை பிள்ளையாருடைய ஆலயத்தில் தன்னாலான தொண்டுகளை செய்வதிலும் மூன்று நேரப் பூசையிலும் கலந்து எல்லோரது நலனுக்காகவும் கை கூப்பி வணங்கி வந்தார்.

எம்மை வாழ வைத்த தெய்வம் எம்மை மட்டுமல்ல தான் நேசித்த எல்லா உறவுகளையும் விட்டு யாரையும் துன்பப்படுத்தக் கூடாது என்ற எண்ணத்துடன் வாழ்ந்த அன்னார் இறக்கும் தறுவாயிலும் யாரையும் தனக்காக துன்பப்படுத்தாது ஆவணி மாதப் பிறப்பிலே இவ்வுலகை விட்டு நீங்கி எம் நினைவில் நிறைவதற்காய் மீளாத்துயில் கொண்டார்.

எமக்கு வாழ்வளித்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய மலர்தூவி அவர்தம் திருப்பாதம் போற்றுகின்றோம்.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் இதயத்திலிருந்து .....

தந்தையில்லாக் குறையை தந்தையாக
நின்று காத்த தாயவளே!
தரணியில் எம்மை தரமாக்கிய தூயவளே!
தாயன்பைப் பொழிந்து - அதில்
தினம் திகைக்கச் செய்து
எம்மை திகைக்க வைத்த தெய்வமே!
இன்று .....
உங்களைக் காணவில்லையே எனத் தேடுகிறோம் எங்குமே!

பத்து மாதம் சுமந்து பெற்ற - கடனை
நாங்கள் இன்னும் செலுத்தி முடிக்க வில்லையே!
பத்தரை மாற்றுத் தங்கமே!
ஏன் பறந்து விட்டீர்கள்
மீதிக் கடனை இங்கு விட்டு விட்டு .....

மருமகனோடு மருமக்களையும் கண்டு மகிழ்ந்தது போதுமென்றா?
இல்லை.
பேரப்பிள்ளைகளின் பேற்றைக் கண்டுவிட்டேன்
இனிப் போதுமென்றா?
ஏன் சென்றாய் தாயே!
எம்மை இடையில் தவிக்க விட்டு

நீங்கள் சிந்திய சிரிப்பின் முத்துக்கள்
சிதறிக் கிடக்கின்றதே எங்கள் முற்றத்தில்
அவை இன்னும் எம்மைப் பார்த்து
ஜொலித்துக் கொண்டிருக்கிறதே .....
அதைப் பொறுக்கவெனக் குனிந்தால்
முத்துக்களுக்கும் பொறுக்க வில்லையே
உடன் மறைவதன் மர்மம் யாதோ!.....
தூரதேசத்து மகனும் - உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவின் முன் வாரத்தில் தானாம்
காலாவதியான கடவுச் சீட்டை
கவனத்தில் எடுத்து காரிய மாற்றினான்
நான் போகப் போகிறேன்
நீ வருவதற்கு ஆயத்தமாயிரு - என்று
மறைமுகமாகக் கட்டளையிட்டீர்களா?
இல்லை.
காலந்தான் அக்காரியத்தை செய்து முடித்ததா?
என்னே விதியின் அற்புதம் .....
விதியை நோவதா - இல்லை.
விம்மி அழுவதா .....

ஆறப் போட்ட சோறு கூட
ஆற நேரமெடுக்கும் ஆனால்
உங்கள் அன்பிலே - என்றுமே
நாம் கண்டதில்லையே சூட்டை
நீங்கள் போன பின்தான் - எங்கள்
இதயங்கள் சூட்டைக் கண்டன .
இன்றும் - எம்
இதயங்கள் அவிந்து கொண்டுதான் இருக்கின்றன.
என்று தணியும் ..... தணிய வேண்டாம்
தணிந்தால் - உங்கள் நினைவு குறைந்து விடும்
அவிந்து கொண்டே இருக்கட்டும்
உங்கள் நினைவுகளுடன் எங்கள் இதயங்கள்.

**கீழே விழாதிருப்பது நமக்கு பெரிய பெருமை அல்ல ஆனால் விழுந்த போதெல்லாம் எழுந்திருப்பதே பெருமைக்கு உரியதாகும்.**

**—கன்ஃபூசியஸ்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள்களின் இதயத்திலிருந்து .....

மகள் என ஒருவர் இருந்தாலும்
தங்களுக்கு எங்களுடன் ஆறு மகள்கள் அம்மா
உங்களுக்கு நாங்கள் மருவி மருமகளாய் வந்தாலும்
என்றும் நாங்கள் உங்கள் மகள் தான் அம்மா...

ஒவ்வொருவர் வீட்டிலும் நீங்கள் வந்து நிற்கும் போது
தங்களைத் தெரியாதவர்கள் யார் இவர் உங்கள்-
அம்மாவாவென கேட்பர்
அப்படி உங்கள் அன்னியோன்னியம் எம்மேல் அன்பை
பொழியும் விதம்
பார்ப்பவர்களுக்கு இவர்கள் மாமி மருமகளா எனத்தான் தோன்றும்

தாங்கள் வந்தவுடன் பேரன் பேத்திகள் எல்லாம் தங்களை
சூழ்ந்திடுவார்களே
அப்பம்மா அம்மம்மாவென துள்ளிக்குதிப்பார் - மழையைக்
கண்ட
மயில் போல! அந்த அன்பு உள்ளங்கள் உங்கள்
பிரிவு கண்டு துவழ்கின்றதம்மா ... அவர்களை ஆற்றப்
பார்க்கிறோம் ஆனால் முடியவில்லை ...

ஏன் அந்த ஆண்டவனுக்கு அவசரமோ தெரியவில்லை
பேரப்பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகளை கண்டு களிக்காமல்
ஏன் போனீர்கள் அம்மா ...
இனி காண்பது எங்கே என ஏங்குகின்றோம் .....
எங்கள் மனமும் தூங்குகின்றது ஏனெனில் தங்களை
கனவிலாவது காண்பதற்காக ...
இறைவனிடம் சென்று விட்ட தங்கள் ஆத்மா
சாந்தியடைய அவனையே வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பொக்கிசம்

மங்காத கடல் வளம் சேர் வல்வையிலே - நான்
சிங்காரமாக மகிழ்ந்திருந்தேன் தோழருடன்
தங்காத இளம் பருவம் தாண்ட என எண்ணி உறவினர்
பங்காளி யாக்க அளவையிலே தேர்ந்தெடுதேன்

மங்கள நாண் பூட்டும் போது மாமி பற்றித் தெரியாது
மங்களேஸ்வரன் நானும் மணவாழ்வில் மகிழ்ந்திருந்தேன்
எங்களது உறவில் உள்ளன்பும் உறுதியும் நிலைக்க மாமியாம்
தங்களது செயல் கண்டு மெய் சிலிர்த்து நின்றேனே.

மருமகனாய் எனை ஒரு போதும் பார்த்ததில்லை - என்மேல்
உருகி நிற்கும் அன்பை என் தாயிலும் மேலாகக் கண்டேன்
வருக என்று சொல்லி வருவோரை உபசரிப்பாய் - நலம்
தருக என்று சொல்லி யாவர்க்குமாய் இறை பணிவாய்

கடைவாசல் தன்னில் உன் உருவமதைக் கண்டு
மடைதிறந்த பாசம் என் மனதை மகிழ வைக்கும்
கிடையாத பொக்கிசமாய் விளங்கிய என் மாமியே - உன்னை
அடையாத தூரத்தில் வைத்து இன்று வெதும்பி
வணங்குகிறேன்.

**மருமகன்**
**மங்களேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் இதயத்திலிருந்து .....

அப்பம்மாவென அழைத்து ஆயிரம் உவகை கொண்டோம்
அம்மம்மாவென அழைத்து ஆயிரம் அன்பு கண்டேன்
பேரர்கள் கலங்குகின்றோம்
பேத்தி நீங்கள் சென்றதெங்கே?

தூரம் எவ்வளவு ஆயினும்
தேடி ஓடி வருவீர்களே
மாதம் ஒரு முறையாயினும் ...
நாடி நிற்போம்
நாமும் உங்கள் வாசலில் நினைத்தவுடன்
இரு நினைவுகளையும் ஏன் தடுத்தான் - ஆண்டவன்!
யார் இட்ட கட்டளை இது?

படியுங்கோ ... படியுங்கோ எனக்
கவனமெடுப்பீர்களே ...
படிப்பில் பூவாய் காயாய் கனியாய்
ஆகி நிற்கும் இவ்வேளையில்
அதன் பயன் காணாமல்
ஏன் பறந்து சென்றீர்கள்?

எங்கள் பாசத்தை மோசம் செய்த - ஆண்டவனை
என்னவென்று சொல்லுவது!
விதி என்பதா - இல்லை
எங்களை தடுக்கவென வந்த
சதி என்பதா ...
ஏற்க முடியவில்லையே!
எம்மால் உங்கள் இழப்பை
தாங்க முடியாமல் தாங்குகிறோம் தரணியில் - நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்தும் இல்லாமல் ...

இருந்தும் இல்லாமல் எங்கு சென்றீர்கள்
மருந்தும் விருந்தும் போல் அளவான அன்புடையீர்
அடுத்தவர் கண்பட்டதோ ... இல்லை ஆண்டவனுக்கு
பொறுக்கவில்லையோ ...

ஏன் அவசரமாக அழைத்தான் உங்களை!
திக்குத் தெரியாமல் தடுமாறுகிறோம் ... காணும் இடம் எல்லாம்
உங்கள் முகம்

அதோ நிற்கிறீர்கள் ஆலயம் அருகே இதோ நிற்கிறீர்கள்
ஆலயம் உள்

ஆனால் கண்கள் காணவில்லையே உருவமாக ...
ஊரில் ஒருவருக்கு துன்பம் என்றால் உங்கள் உள்ளம் பதை
பதைக்கும்

தினம் காண்போரைக் காணாவிட்டால் ஏன் வரவில்லை என
ஆவலுடன் கேட்பீரகளே

வருத்தமா ... துன்பமா ... என வினாவுவீர்களே ...
நல்ல காரியம் நடந்தால் அது தான் நல்லது என வாயார
மகிழ்வீர்களே

குத்துக் கதைகள் குதர்க்கம் பேசுவோரிடம் ஏன் வம்பு என
விலகி இருப்பீர்களே

இப்படி நல்ல உள்ளம் கொண்ட உங்களைக் கவர காலனுக்கு
எப்படித்தான் மனம் வந்ததோ?

பெற்ற பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மனதார மருமக்கள்
மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அவர்களோடு
நாமும் தேடுகிறோம் ... வாழாமலிருக்கிறோம்.

***உங்களைக் காணாமல் கலங்குகின்றோம் ... கவலையுடன்***

**அளவையூர் மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்கோர் அன்னை

தவத்தில் மிக்கோர் தாம் நிறைந்த அளவையிலே
பல வினைகள் நீக்கி அருள் புரியும் கும்பளாவளையிலே
பொன்னையா சிவக்கொழுந்து பெற்றெடுத்த பெண் முத்து
உவப்பு மிக்க பதினொருவர் உடன் பிறப்பாய் விளங்க

எவர்க்கும் அன்பு இரக்கம் காட்டும் பண்பினள்
சிவத்தின் அருள் கூடிடவே பெயர் பெற்றாள் - உரோகினியாள்
அவத்தொழில்கள் நினையமாட்டாள். பிறர்துயரை
நிவர்த்தி செய்யும் துடிப்புடனே வாழ்த்திருந்தாள்.

நாதி என்று சொல்ல நல்ல குருசாமி நாயகனைத் தன்
பாதியாக்கி மண வாழ்வை மகிழ்வுடனே ஏற்றிருந்தாள்
வீதியிலே கும்பம் வைத்து விளக்கேற்றி நின்று
சோதியுடன் விநாயகனின் வீதியுலா தரிசிப்பாள்.

ஏதிலிகள் என்றால் மனமிரங்கி, அவர்க்கு - நல்ல
சேதி சொல்லி மகிழவைக்கும் தூய பண்புடையாள்
ஆதி சிவன் அருளாலே ஆண் மக்கள் ஐவருடன்
மேதினியார் போற்ற ஒரு பெண் பிள்ளையும்
ஓதி உணரும் நல்ல கல்வியிலே சிறப்பாக்கி
வேதியர்கள் துணையுடன் நல்ல மணமும் செய்வித்தார்.

இல் வாழ்வில் மக்கள் நல்லபடி உயர்ந்து
நல் மக்கள் பல பெற்று நயந்து வரும் வேளையில்
செல்வம் பொழிந்து பேரப்பிள்ளைகளை அணைத்து
எல்லோரும் பார்த்திருக்க பெருமை கொண்டிருந்தார்
நல்லோரும் அல்லோரும் நாள் வந்து விட்டால்
பொல்லாத காலன் பொறுத்திருக்கமாட்டான்
சொல்லாமல் கொள்ளாமல் உரோகினியும் நாள்வர
எல்லாம் வல்ல விநாயகனின் தாள் சேர்ந்தாள்.

**மாரிசிட்டியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சகலகலாவல்லி மாலை



ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள், என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

படிக நிறமும், பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லும் சொல் லாதோகவி? - (கம்பர்)

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்ட
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் வெள்ள
அரியா சனத்தில் அரசரோடு என்னை
சரியா சனம்வைத்த தாய் - (காளமேகப் புலவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 03

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 04

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 05

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாய்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்குமவண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 08

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. 10

-குமரகுருபர சுவாமிகள்-

**எவராவது தான் தன்னுடைய வாழ் நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர்கள் தம்வாழ்வில் புதிய முயற்சிகளை செய்துபார்த்ததில்லை என்று பொருள்.**

**-ஐன்ஸ்டீன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



**குறள் வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்து ஓங்கும், நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

**காப்பு**

**அமரரிடர் தீர வமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி.**

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும்செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திர முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டா யுதம் பாசா ங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன்வருக
ஐயும் கிலியும் அடைவுடன்சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலை பெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ் சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து தவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதி யென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என் னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேலி ரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணா ங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கையிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பானா டியை முனை வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக்கலங்கிட
இரிசிக் காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலுளும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளெ ன்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதா ளெனைக்கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறந்த
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெ னக்கா
மண்ணா ளரசரும் மகிந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடனி ரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன் கடன்
பெற்றவள்குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்ற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்புத் தோத்திரம்



## விநாயகர் துதி

**முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு**
**என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்**
**சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்**
**எக்குற்றமும் வராமற் கா.**

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியை உடையவளே அம்மா காளித்தாயே!
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீநோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத்தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழை காப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத்தலைவியரே பராசக்தி தாயவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டுடைத்தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்கவந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக்காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்.
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் கூடிவரும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச்சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக்கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனிற்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச்செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச்செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாம் தருவாள் சீரபெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலோர்களெல்லாம் ஏற்றியெம்மைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கிமிக வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக்காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்.

**பிறர் உங்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அவ்வாறே நீங்கள் பிறறிடம் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.**

**-தந்தை பெரியார்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்



1. திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்கம் தை முதல் நாள்

2. திருவள்ளுவர் ஆண்டை அறிவித்தவர் மறை மலை அடிகள்

3. திருவள்ளுவர் ஆண்டுக்கு அரசக் கட்டளை வழங்கியவர் தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி

4. திருக்குறளுக்கு முதலில் உரை வரைந்தவர் மணக்குடவர்

5. திருக்குறளுக்கு பத்தாவதாக உரை எழுதியவர் பரிமேலழகர்

6. திருக்குறளுக்கு வழங்கப்படும் பெயர்கள் நாற்பத்து நான்கு

7. திருக்குறளுக்கு உரை எழுதிய பெருமக்கள் - 206

8. திருக்குறளுக்கு வந்துள்ள மொழி பெயர்ப்புக்கள் - 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திருக்குறளை இலத்தீன் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர்

10. திருக்குறளை ஆங்கிலத்தில் முதன் முதலாக மொழி பெயர்த்தவர் ஜி.யு.போப்

11. திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.

12. திருக்குறளுக்காக முதலில் மாநாடு நடத்தியவர் தந்தை பெரியார்.

13. குமரியிலிருந்து டெல்லி வரை செல்லும் தொடர்வண்டியின் பெயர் திருக்குறள் விரைவான்.

14. குமரிக் கடலில் நிற்கும் வள்ளுவர் சிலையின் உயரம் 133 அடி.

15. திருக்குறள் ரஷ்ய நாட்டில் கிரெம்ளின் மாளிகையின் நில வறையில் உள்ளது.

16. திருக்குறள் இலண்டனில் விவிலியத் திருநூலுக்கு இணையாக வைக்கப்பட்டுள்ளது.

17. திருக்குறளை காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்தவர் உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய்.

18. திருக்குறளுக்குத் தங்கக்காசு வெளியிட்டவர் எல்லீசர்.

19. திருக்குறளின் பெருமையினை உலக அறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

20. திருக்குறளை 1812ம் ஆண்டு முதல் அச்சிட்டு வழங்கியவர் ஞானப் பிரகாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்று பாராட்டியவர் பாரதியார்.

22. வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே என்று பாராட்டியவர் பாரதிதாசன்.

23. திருக்குறளின் முதற் பெயர் முப்பால்.

24. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் - 133.

25. திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள் - 1330.

26. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள குறட்பாட்கள் - 380.

27. திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் - 700.

28. திருக்குறள் காமத்துப் பாலில் உள்ள குறட்பாக்கள் - 250

29. திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.

30. திருக்குறளில் உள்ள சொற்கள் 14000.

31. திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42194.

32. திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 - இல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை.

33. திருக்குறளில் இடம் பெறும் இரு மலர்கள் - அனிச்சம் , குவளை.

34. திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்.

35. திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை - குன்றிமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ

37. திருக்குறளில் இரு முறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்

38. திருக்குறளில் இடம் பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்

39. திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட (1705) ஒரே எழுத்து - னி

40. திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ , ங

41. திருக்குறளில் இடம் பெறாத இரு சொற்கள் - தமிழ், கடவுள்

42. திருக்குறளில் இடம் பெறாத உயிரெழுத்து ஔ

43. திருக்குறளில் இல்லாத எண் ஒன்பது

44. திருக்குறளில் உயிரினதும் மேலானதாகப் போற்றப்படுவது ஒழுக்கம்

45. திருக்குறளை அனைத்துச் சமயங்களும் ஏற்றுப் போற்றுகின்றன.

46. திருக்குறள் தமிழ்த் தாயின் உயிர் நிலை என்பார் கவிமணி

47. திருக்குறளை முதலில் பயிற்றுவித்தவர் வள்ளலார் இராமலிங்கம்.

**கல்விச்சாலையின் கதவுகளை திறக்கிறவன்**
**சிறைச்சாலைகளின் கதவுகளை மூடுகிறான்.**
**–விக்டர் ஹியூகோ–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு ...

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தினை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | - | வாய்ப்பு |
| இளமையில் தேவை | - | கல்வி |
| உருகும் உள்ளத்தில் உதிப்பது | - | அன்பு |
| இறுகும் உள்ளத்தில் உதிப்பது | - | அகந்தை |
| அன்பு விளைவிப்பது | - | ஒற்றுமை |
| அகந்தை விளைவிப்பது | - | வேற்றுமை |
| வேற்றுமையில் விளைவது | - | துன்பம் |
| வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதவை | - | அவமானம், பழி |
| போனால் வராதவை | - | மானம், உயிர் |
| தானாக வருவது | - | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | - | பாசம், பந்தம் |
| அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| எல்லோர்க்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி தொடர்பான பொது அறிவு

## இலங்கை பாடசாலைக் கல்வி

1943 - 1943ம் ஆண்டு 26ம் இலக்க அறிக்கையில் இலவசக் கல்வியின் தந்தையான C.W.W கன்னங்கரா அவர்களால் இலவசக்கல்வி ஆலோசனை முன் வைக்கப்பட்டது.

1945 - இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1952 - வறுமையான திறமைமிக்க மாணவர்களின் நலன் கருதி புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமானது

1956 - சுயமொழிகள் போதனை மொழிகளாக மாற்றப்பட்டன.

1960 - இலங்கைப் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது.

1968 - பாடசாலைகளில் விசுக்கோத்து நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பமானது.

1972 - கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சைக்கு பதிலாக அமைந்த பரீட்சை தேசிய கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை

1980 - இலவச பாடநூல்கள் வழங்கப்பட்டன. கல்விச் சீர்திருத்த வெள்ளையறிக்கை வெளியிடப்பட்டது.

1981 - கல்வி வெள்ளை அறிக்கை அமுலாக்கப்பட்டது.

1987 - தேசிய பாடசாலைகள் உருவாக்கும் நடைமுறை ஆரம்பமானது.

1989 - இலசவ மதிய உணவுத்திட்டம் ஆரம்பமானது.

1993 - இலவச சீருடை விநியோகம் ஆரம்பமானது.

1994 - இலவச மதிய உணவுத்திட்டம் நிறுத்தப்பட்டது.

1998 - க.பொ.த உயர்தர பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக அனுமதிக்காகப் பொதுச் சாதாரண பரீட்சை எனும் விசேட பரீட்சை அறிமுகமானது. இது 2000ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 - பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை (SBA - School Base Assesment) அறிமுகமானது. அதாவது புள்ளிகள் வர்ணங்களாக வெளிப்படுத்துவதுடன் மாணவர்களின் ஆளுமைப் பண்புகளுள் வெளிப்படுத்தப்படுகின்றது.

2001 - பாடசாலைக் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது.

2002 - SBA புள்ளிகள் க.பொ.த சாதாரண பெறுபேறுகளுடன் சேர்க்கப்பட்டது.

2004 - அரச தனியார் பாடசாலைகளின் தரம்1 அனுமதிக்கென புதிய நடைமுறைகள் அறிமுக்கப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக பிரயோகத்திற்காக நியமப் புள்ளி (Z ஈட்டு) அறிமுகப்படுத்தப்பட்டது.

2005 - SBA புள்ளிகள் க.பொ.த உயர்தரப் பெறுபேற்றுடன் சேர்க்கப்பட்டது.

2007 - றொகர் கைப் என்பவரின் தலைமையில் உயிரியல் விஞ்ஞான கலைத்திட்ட கற்கை குழுவினரால் கட்டுருவாக்க வாதத்திற்கான 5E எனும் கற்றல் மாதிரி உருவாக்கப்பட்டது. வகுப்பறைக் கற்பித்தலில் மாணவர்கள் சுலபமாக பாட அலகுகளையும் புதிய விடயங்களையும் விளங்கிக் கொள்வதற்கான ஒரு பயனுறுதி மிக்க மாதிரி உருவாக இது காணப்படுகின்றது.

2011 - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்திற்கமைவான பரீட்சை 2011 ஓக்ஸ்டில் நடைபெற்றன.

2011 - இலங்கையின் புதிய கல்விச் சட்டம் 2008ம் ஆண்டில் தேசிய ஆணைக்குழு தேசிய கல்வி நிறுவக முன்னாள் பணிப்பாளரும் தேசிய கல்வி ஆணைக்குழு பிரதித் தலைவருமான கலாநிதி ஜி.பி குணவர்த்தன அவர்களின் தலமையில் அமைக்கப்பட்டது. இப்பொதுக் கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையின் முக்கிய விடயங்கள் இலக்குகளும், மூல தத்துவங்களும், கல்வி முறையான கட்டமைப்பும், தொழிற்பாடுகளும், கல்வி முறைமை உள்ளடக்கமும் செயல் முறையும், கல்வி ஆணையாளர், கல்வி தராதரங்கள் மற்றும் தர உறுதிப்பாடு.

- தற்போது நடைமுறையில் கல்விச் சட்டம் 1939 ஆம் ஆண்டில் 31 ஆம் இலக்க கல்விச் சட்டம்.

- இலங்கையின் 1980 இல் இலங்கை முதலீட்டு சபையின் அதிகாரத்தின் கீழ் 42 சர்வதேசப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இவற்றுள் 37 சர்வதேசப் பாடசாலைகள் கொழும்பில் உள்ளது.

- 2011ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கலை, வணிகம், விஞ்ஞான, கணித பாடப் பிரிவுகளுக்கு மேலதிகமாக ஒரு பாடப் பிரிவாக தொழில்நுட்ப பிரிவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனுடைய முதலாவது பரீட்சை 2015ம் ஆண்டு நடைபெறும்.

## இலங்கையின் உயர் கல்வி

1870 - சிலோன் வைத்திய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

1875 - கொழும்பு சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1884 - விவசாய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

1893 - முதலாவது அரசாங்க தொழிநுட்பக் கல்லூரி மருதானையில் ஆரம்பிக்கப்பட்டது.

1921 - லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சிலோன் பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1957 - காலி தொழிநுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1959 - பௌத்த கற்கை நிலையங்களை வித்தியோதயா வித்தியாலயங்கார பிரவெனாக்கள் 1958ம் ஆண்டு 45ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக அந்தஸ்து அளிக்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டவுடன் இப் பிரிவெனாக்களே பின்னர் முறையே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக களனி பல்கலைக்கழகம் எனப் பெற்றன.

1966 - உயர் கல்விக்கான தேசிய கவுன்ஸில் 1966 ஆம் ஆண்டு 20ம் இலக்க சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

1972 - கட்டுப்பொத்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1973 - ஜாமி ஆ நளீமியா நிறுவப்பட்டது. இது முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சிக்கென உருவாக்கப்பட்டது.

1974 - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1978 - பல்கலைமானியங்கள் ஆணைக்குழு 1978ம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது தேசிய பல்கலைக்கழகங்களின் மாணவர் அனுமதிக்கு பொறுப்பாக உள்ளது. இச்சட்டத்தின் கீழ் இலங்கை பல்கலைக்கழகமானது கொழும்பு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.

1980 - இலங்கை திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது, வட கொழும்பு மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டது.

1980 - பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. உயர் கல்வி பெறும் வசதி குறைந்த மாணவர்களுக்கென முதல் மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகிறது. இதனை முன்னாள் கௌரவ அமைச்சர் அமரர் லலித் அத்துலதமுதலி உருவாக்கினார். இவரே உயர்கல்வி அமைச்சையும் ஆரம்பிப்பதற்கான ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற் கொண்டனர்.

1982 - பௌத்த பாளி பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1984 - றுகுணு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985 - தேசிய கல்வியற் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. இது ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கவென உருவாக்கப்பட்டதாகும். தேசிய கல்வி நிறுவகம் (National Insitute of Education - NIE) உருவாக்கப்பட்டது. இது விசேட பாராளுமன்ற சட்ட மூலம் உருவாக்கப்பட்டது.

1986 - மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1991 - இணைந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. சப்ரகமுவ பல்கலைக்கழகம், ராஜரட்ட பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1996 - தென்கிழக்கு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1997 - சுதே மருத்துவக் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டது.

2004 - க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியான வருடமே நாட்டின் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் எனும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

2005 - களனிப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் கவின் கலைப் பல்கலைக்கழகம் தனியொரு கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டது. 15 வது தேசிய பல்கலைக்கழக ஊவா வெல்லச பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

* முதலில் உருவாக்கப்பட்ட கல்வியற் கல்லூரிகள் - மகாவலி கல்வியற் கல்லூரி , பஸ்துன்ரட்ட கல்வியற் கல்லூரி.

* உலகின் மிகப் பழைய பல்கலைக்கழகமும், முதலாவது பல்கலைக்கழகம் போலொக்னா பல்கலைக்கழகம் - இத்தாலி (1088ம் ஆண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இரண்டாவது பல்கலைக்கழகம் லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் ஆகும்.

* இலங்கை தேசிய கல்வியற் கல்லூரிகள் - 18

* தேசிய கல்வியியல் கல்லூரிகளில் தேசிய கல்வி டிப்ளோமா எனும் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.
* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை - 15
* பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிகளை வழங்கும் நிறுவனங்கள் கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம்.

* இலங்கையின் புதிய கல்விக் கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் டிஸிற்றல் - கற்பித்தல் என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

* பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள அனுமதிக்கும் போது க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற சராசரி Z புள்ளி நிரலின் திறமை வரிசை அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர். மேலும் நாடளவாவிய அடிப்படையில் Z புள்ளிகளின் வரிசையில் 40% மான இடங்களும் மாவட்ட திறமை அடிப்படையில் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் உள்ள 55% வலையிலான இடங்கள் மொத்த சனத்தொகை விகிதாசாரப்படி 25 நிர்வாக மாவட்டங்களும், ஒவ்வொரு கற்கை நெறிக்கும் உள்ள இடங்களில் 5% வரை விசேட ஒதுக்கீடாக கல்வியில் பின் தங்கிய 16 மாவட்டங்களுக்கு சனத்தொகை விகிதாரப்படி ஒதுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவான கல்வித் தகவல்கள்

✦ கட்டாயக் கல்வி வயதெல்லை 5 -16

✦ பாடசாலைகளின் வகைகள் - IAB, IC, வகை II, வகை III,

✦ ஆசிரியர்களுக்கான வான்மை விருத்திப் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள்
- ❋ தேசிய கல்வியியற் கல்லூரி
- ❋ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள்.
- ❋ தேசிய கல்வி நிறுவகம்

✦ கல்விச் சேவையின் பிரிவுகள் - ஆசிரியர் சேவை , அதிபர் சேவை கல்வி நில்வாக சேவை

✦ கல்வியலுக்காக தனிப்பீடம் இருக்கும் பல்கலைக்கழகம் - கொழும்பு பல்கலைக்கழகம்

✦ அடிப்படைக்கல்விக்காகவும் சமயக் கல்விக்காகவும் போர்த்துக்கேயர் ஆரம்பித்த பாடசாலையின் வகை திணக்களப் பள்ளி

✦ ஹந்தெஸ்த கல்வி முறைமை ஆரம்பிக்கப்பட்ட பாடசாலகள் அழைக்கப்பட்ட பெயர் - ஹந்தெஸ்த கிராமியப் பாடசாலைகள்

✦ இலங்கையின் மக்களுக்காக கட்டாயக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் 1954ம் ஆண்டின் C.W.W கன்னங்கரா கல்விச் சீர்திருத்தங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிராம பிரதேசங்களில் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சினால் ஆரம்பித்த புதிய வகைப் பாடசாலை - இசுறு

- கற்றல் கற்பித்தல் செயன் முறையில் மாணவர் பங்குபற்றுகை உயர்ந்த பட்சமாக உள்ள கற்பித்தல் முறை - மாணவர் மையக் கற்பித்தல்

- இலங்கையில் பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிப்பதற்கு மாணவர் தமது பாடத்துறைக்குரிய பாடங்களுக்கு மேலதிகமாக கட்டாயம் சித்தியடைய வேண்டிய பாடம் - பொதுச் சாதாரணப் பரீட்சை

- இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படும் தரங்கள் - 10, 11, 12, 13

- பாடசாலைப் பாடவிதானத்தில் முதன் முதலாக ஒன்றிணைந்த பாடங்கள் புகுத்தப்பட்ட ஆண்டு 1973 சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் - ஆரம்பக் கல்வியில் தர விருத்தியினை ஏற்படுத்துவதற்காக யுனிசெப் உதவியுடன் 2002 இல் உருவானதே இதுவாகும்.

- பாடசாலை பாடவிதானத்திற்கு தொழில் முன்னிலைப் பாடங்கள் புகுத்தப்பட்ட ஆண்டு - 1973

- சிறுவர் நட்புறவுப் பாடசாலை - ஆரம்பக் கல்வியில் தர விருத்தியனை ஏற்படுத்துவதற்காக யுனிசெப் உதவியுடன் 2002 இல் உருவானதே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ அரசாங்கத்தினால் சமய பாடசாலைகள் கையேற்றப்பட்ட ஆண்டு - 1960 - 61

✦ மத்திய மகாவித்தியாலயங்கள் நிறுவிய பெருமைக்குரிய கல்வியாளர்கள் C.W.W கன்னங்கரா

✦ இலங்கை ஆசிரியர் சேவை தாபிக்கப்பட்ட வருடம் - 1994

✦ ஆசிரியர் சேவை 31.10.1992 திகதியிடப்பட்ட 143/4 இலக்க அதி விசேட வர்த்தகமானி அறிவித்தல் மூலம் 06.10.1994 இல் இருந்து அறிமுகமானது.

✦ கல்விக் கொள்கை நிறுவனம் தேசிய கல்வி ஆணைக்குழு தேசிய மட்ட பரீட்சைகளை நடாத்தும் நிறுவனம் - இலங்கை பரீட்சைத் திணைக்களம்

✦ க.பொ.த சாதாரண தரத்தில் ஒரு மாணவனின் தோற்றக்கூடிய கட்டாய பாடங்கள் - 06

✦ க.பொ.த சாதாரண தரத்தில் ஒரு மாணவனின் தோற்றக் கூடிய தொகுதி பாடங்கள் - 03

✦ இலவசக் கல்வி முறையை அறிமுகம் செய்த நாடு - நெதர்லாந்து

✦ உலகின் முதல் கல்வித் துறையில் தேர்வுகளை அறிமுகப்படுத்திய நாடு - சீனா

✦ க.பொ.த (சா/த) பரீட்சைக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆறு மையப் பாடங்கள் - தாய்மொழி, கணிதம், ஆங்கிலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம், சமயம், வரலாறு

- 13 வது அரசியல் அமைப்பு திருத்தத்தின் படி கல்வி தொடர்பான மத்திய அரசின் சில அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டது. அவ்வாறான மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தாது மத்திய அரசினால் வைத்திருக்கப்பட்ட அதிகாரங்கள் - கலைத்திட்ட மறுசீரமைப்பு மற்றும் பரீட்சைகள் நடாத்தல்.

- பாடத்திட்டங்களை தயாரிக்கும் நிறுவனம் - தேசிய கல்வி நிறுவனம்.

## கல்வியுடன் தொடர்புடைய விரிவாக்கம்

- SLPS - Sri Lanka Principal Service
- SLTS - Sri Lanka Teachers Service
- NIE - National Institute Of Education
- SLTES - Sri Lanka Teachers Education Service
- NETS - National Education Testing Service
- SBA - School Based Assessment
- AETS - Association of Education Technology Service
- 5E - E1 - Engagement
  E2 - Exploration
  E3 - Explaination
  E4 - Elaboration
  E5 - Evaluation
- PSI - Programme for School Improvement
- SBTD - School Based Teacher Development
- SE - School Empowerment
- SBM - School Based Management
- SLIP - School Level Improvement Plan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 11 - 1942 | 17 - 08 - 2016 |

(யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு.கு.விமலன் அவர்களின் பாசமிகு தாயார்)

## அமரர் உரோகினி குருசாமி

மௌனங்கள் சூழ்ந்து கொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரை புரள
உங்களை இழந்ததால்
எங்கள் மனம் துடிக்குதம்மா
அன்புக்கு இலக்கணமாய்
தரணியில் வாழ்ந்தவரே
விடியல்கள் அஸ்தமனமாக
விலகிவிட்ட உங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றன இதயங்கள்
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
2017 A/L மாணவர்கள்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1942 . 11 . 23



உதிர்வு 2016 . 08 . 17

( வட மாகாண விளையாட்டு திணைக்களத்தின் யாழ் மாவட்ட கபடி பயிற்றுனர் ரு.முகுந்தன் அவர்களின் அன்புத்தாயார் )

## அமரர் குருசாமி உரோகினி

( அளவெட்டி மத்தி அளவெட்டி )

தாங்கவில்லை எங்களால்...
செய்திகேட்டுச் சிதறிப்போனோம்
உங்களுடைய சிரித்த முகம் மட்டும்
எம் கண்முன்னே பசுமையாய்...
என்ன செய்ய முடியும்
எம்மால் அழுவதைத் தவிர,
விழிநீர் திரள விடை கொடுத்து அனுப்புகின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவுத்துயரில்...

விளையாட்டு உத்தியோகத்தர் சங்கம்
வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

## அமரர்

## குருசாமி உரோகினி

தோற்றம்
23 . 11 . 1942



மறைவு
17 . 08 . 2016

அம்பலவனாய் உறவினராய் அனைவற்கும் எஜமானாய்
ஆறுதல் பல கூறி அன்புடன் வாழ்ந்தெம்மை
இன்முகம் காட்டி இன்றுவரை வாழ்ந்து விட்ட
ஈராறு கரம் கொண்டவேலன் புகல்வியாய்
உதித்த ஆண்டு எழுபதைத் தாண்டினாலும்
உறவினனாய் இருந்துவிட்டு
ஏன் அம்மா எமைவிட்டு விண்ணுக்கு விருந்தாளியானீர்
ஐயனே உனைப்பிரிந்த செய்திகேட்டு எம் இதயமே
ஒருகணம் நின்று ஓடி மீண்டதம்மா
ஓடிவருவீரா மீண்டும் எம்முன் என எண்ணும்போது
ஔவை சொன்ன சொல்லதுவே ஆறுதலை தருகுதம்மா

அன்னாரது பேரிழப்பால் துயரும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மாசாந்திஅடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

துயர் பகிரும்
கும்பளாவளைப்பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தாசபையினரும்
தொண்டர்சபையினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 11 - 1942 | 17 - 08 - 2016 |

(யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு.கு.விமலன் அவர்களின் பாசமிகு தாயார்)

# அமரர் உரோகினி குருசாமி

பார் புகழும் புனித
மண்ணில் பிறந்தவரே
அன்பிற்கு இலக்கணமாகவும்
பண்பின் சிகரமுமாய் திகழ்ந்தீரே
அம்மா உங்கள் பிரிவு கண்டு
எல்லோரும் விம்மியழ
உறவுகள் புரண்டு அழ
ஊரோ உங்கள் பிரிவு கண்டு
வேதனை அடைய நாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



பிறப்பு

23 * ** 11 * ** 1942

இறப்பு

17 * ** 08 * ** 2016

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்
குருசாமி முகுந்தன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் உறோசினி குருசாமி

மறைந்தவர்கள் எல்லோரும்
மண்ணாவதில்லை! மாறாக...
மறைந்தும் மறையாத சூரியனாய்
வாழ்பவர்கள் சிலரே..!
அந்த வகையில் அழியாத புகழுடன்
வாழ்ந்து வானுலகு சென்று விட்டீர்கள்!
விழிநீர் சொரிய அஞ்சலிக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

பழைய மாணவர் சங்கம்
யா/அருணோதயக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1942 * 11 * 23



உதிர்வு
2016 * 08 * 17

யாழ்மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளரும், வடமராட்சி கபடி சங்கத்தின் நிர்வாக
உறுப்பினருமான திரு.கு.முகுந்தன் அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் குருசாமி உரோகினி

குலத்தின் ஒளிவிளக்கே குலமகளே
ஞாலம் போற்றிட நல்லறத்தில் வாழ்ந்தவரே
காலத்தின் கோலத்தால் காலனுமை அணைத்தானோ!
கலங்கி நிற்கின்றோம் கைகொடுப்பார் யாரென்று.

மண்ணில் மணம்பரப்ப மக்களை சுமந்துவிட்டு
கண்ணை மூடிக் காலனிடம் சென்றதேனோ?
கண்ணீர் துடைப்பவர் யார்? கவலை துடைப்பவர் யார்?
கருணையில்லாக் காலனிற்கும் நம் கதறல் கேட்கலையோ?
பாலைவனத்துப் பட்டமரம் போல
பாரில் பதறுகின்றோம் கண்ணில் நீர் மல்க.



**அன்னாரது துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.**

பிரிவுத்துயருடன்....
வடமராட்சி கபடி சங்கம்

T.P.No: 0774966997. E.mail: puvan2009@gmail.com

# கண்ணீர் காணிக்கை



மலர்வு 1942 . 11 . 23

உதிர்வு 2016 . 08 . 17

(யாழ் மாவட்ட கபடி பயிற்றுநர்
கு.முருகதன் அவர்களின் அன்புத்தாயார் )

## அமரர் குருசாமி உரோகினி

( அளவெட்டி மத்தி அளவெட்டி )

பாதிவழி உன் பயணம்
பரிதவிக்கும் எங்கள் மனம்
மீதிவழி நலம் தொடர
யாருமுளர்டோ எங்களிடம்
பாசம் எனும் பெருங்கடலில்
பத்து மாதம் நீ சுமந்து
பெற்ற பிள்ளை விழிநீர் சிந்த,
பாதியிலே விட்டுப்போன தெங்கே!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
விளையாட்டு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.
விளையாட்டு பிரிவு.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

## அமரர்

## குருசாமி உரோகினி



தோற்றம்
23
.
11
.
1942

மறைவு
17
.
08
.
2016

அயலவனாய் உறவினராய் அனைவற்கும் எஜமானாய்
ஆறுதல் பல கூறி அன்புடன் வாழந்தெம்மை
இன்முகம் காட்டி இன்றுவரை வாழ்ந்து விட்ட
ஈராறு கரம் கொண்டவேலன் புதல்வியாய்
உதித்த ஆண்டு எழுபதைத் தாண்டினாலும்
உறவினனாய் இருந்துவிட்டு
ஏன் அம்மா எமைவிட்டு விண்ணுக்கு விருந்தாளியானீர்
ஐயனே உனைப்பிரிந்த செய்திகேட்டு எம் இதயமே
ஒருகணம் நின்று ஓடி மீண்டதம்மா
ஓடிவருவிரா மீண்டும் எம்முன் என எண்ணும்போது
ஔவை சொன்ன சொல்லதுவே ஆறுதலை தருகுதம்மா

**அன்னாரது பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு**
**ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின்**
**ஆத்மாசாந்திஅடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.**

ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

துயர் பகிரும்
கும்பளாவளைப்பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தாசபையினரும்
தொண்டர்சபையினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

## அமரர்
## குருசாமி உ ரோகினி

தோற்றம்
23 . 11 . 1942



மறைவு
17 . 08 . 2016

விடியலுக்கு விடி வெள்ளி வேண்டும்
என்றிருந்த குருசாமிக்கு
விடிவெள்ளியாய் ஜொலித்தவளே.
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வந்த குலவிளக்கே
குதூகலமாக வாழ்ந்து
பிள்ளைகள் பேரர்கள் கண்டு
உற்றார் உறவுகளுடன் சேர்ந்து
போகுலகை அடைந்து
நாளையும் நாளும் நலம் கூடும்
என எண்ணியிருந்த எம்மை:
கண்ணீர் கடலில் ஆழ்த்தி விட்டு
சொல்லாமல் கொள்ளாமல் சென்றது ஏன் அம்மா?
துயரில் வாடும் உங்கள் குடும்பத்துடன்
சேர்ந்து நாமும் துயரில்!!

**அன்னாரது பேரிழப்பால் துயரும் குடும்பத்தினருக்கு**
**ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின்**
**ஆத்மாசாந்திஅடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.**

ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

துயர் பகிரும்
ராஜன்
(கோபி)

அரவொ. ஏ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 11 - 1942 | 17 - 08 - 2016 |

(யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு.கு.விமலன் அவர்களின் பாசமிகு தாயார்)

## அமரர் உரோகினி குருசாமி



காற்றோடு வந்த செய்தி எம்மை
கருமுகிலாய் சூழ்ந்ததுவே
அந்தகனே உன் வரவால்
எம் தாயை கவர்ந்து சென்றாய்

எந்நாளும் இறைவன் துணைசேர
உன் பாதமருகில் நல் வீட்டில்
இன்பமாக வாழ்ந்து வந்தீர் - ஏன்
இப்போது நெடும் துயில் கொண்டீரோ



நும் பிள்ளைகள் உமை பிரிந்து
கத்துகிறார் கதறுகிறார் யாவருக்கும் யார்
ஆறுதல் சொல்வார் - வான் வீட்டில்
சேர எந்நாளும் வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பழைய மாணவர்கள்**
**யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி உங்களுக்கு.....

*2016.08.17* அன்று இறையடி சேர்ந்த எமது தலைவி

**அமரர் குருசாமி உரோகினி**

அவர்களின்


மறைவுச் செய்தி கேட்டு விரைந்து வந்து ஆறுதல் சொல்லியும் எமது துயரில் பங்கெடுத்தும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவிஒத்தாசைபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தவர்கள், உலகின் வெவ்வேறு திசைகளில் இருந்தெல்லாம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எமக்கு ஆறுதலும் அன்பும் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி தந்த அன்பர்களுக்கும் உணவு மறந்திருந்த வேளையில் உணவைத் தந்து உபசரித்த அனைவருக்கும், ஜேர்மனியிலும் வீடு சென்று நம்துயர்பகிர்ந்து கொண்ட அனைவருக்கும், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழையும் இம்மலரையும் சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய CKJ அச்சக நிறுவனத்தினர்க்கும், அந்தியேட்டிக் கிரியை, சபீண்டிகரணம் ஆகியவற்றில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.



இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

சுமி

நவரத்தினசாமி + தையல்நாயகி

ஸ்ரீதரன் ஜெயந்தி ஜெயக்குமார் சுதா

**குருசாமி** துரைச்சாமி சரோஜினி யோகசாமி திருநாவுக்கரசு

முகுந்தன்
+
யசோதராதேவி

சந்தோஷ்
வைஷ்ணவி
பிரணவி

இராகவன்
+
லதாங்கி

பிரவீனா
பிரபஞ்சன்
பிரியங்கன்

பிரபாகரன்
+
இராகராஜேஸ்வரி

அபிப்பிரியன்
அக்ஷாமினி

அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அன்புத் தெய்வங்கள்



ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே

நாட்டமென்றேயிரு சற்குரு பாதத்தை நம்பு பொம்மல்
ஆட்டமென்றேயிரு பொல்லாவுடலை அடர்ந்த சந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தை வாழ்வைக்கு குடங்கவிழிநீர்
ஓட்டமென்றேயிரு நெஞ்சே உனக்கே உபதேசமிதே.

-பட்டினத்தார்-

அச்சமைப்பு : சிகேஜே பிறிண்ட் கிறபிக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org